# 3

# பரிசளிப்பு விழா

அன்று வெள்ளிக்கிழமை. அசோகா வித்தியாலயம் விழாக்கோலம் பூண்டிருந்தது. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரும் குழுமியிருந்தனர். பரிசளிப்பு விழாவிற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகி இருந்தன.




பாடசாலையில் வருட இறுதிப் பரீட்சை முடிந்தது. முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்குப் பரிசு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஒன்பதாம் ஆண்டில் முதல் மூன்று இடங்களையும் முறையே அனுராதா, அனோமா, அகல்யா ஆகியோர் பெற்றிருந்தனர். விழாவிற்குப் பிரதம விருந்தினராக அசோகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் கலாநிதி கருணாகரனும், அவருடைய துணைவியாரும் வந்தனர். மங்கலப் பேரிகை முழங்கியது. அவர்கள் ஊர்வலமாக மேடைக்கு அழைத்துவரப்பட்டனர்.

அனுராதா, அனோமா, அகல்யா ஆகியோர் மகிழ்ச்சி பொங்க அமர்ந்திருந்தனர். அனுராதா வகுப்பில் முதலிடம் பெற்றாள். பேச்சு, பாவோதல் ஆகியவற்றிலும் அவள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தாள். அனுராதா வித்தியாலயத்தின் முதன்மை மாணவியாகத் தெரிவு செய்யப்பட்டாள். பிரதம விருந்தினர் அனுராதாவிற்குத் தங்கப் பதக்கம் சூட்டினார்.

## கிரகித்தற் பயிற்சி

### பூரண வாக்கியங்களில் விடை தாருங்கள்

1. பரிசளிப்பு விழா நடந்த பாடசாலையின் பெயர் என்ன ?
2. முதலிடம் பெற்ற மாணவி யார் ?
3. அனோமா எத்தனையாம் இடத்தைப் பெற்றாள் ?
4. விழாவின் பிரதம விருந்தினர் யார் ?
5. அனுராதாவுக்கு என்ன பரிசு கிடைத்தது ?

### ஒத்த கருத்துச் சொற்கள்

- ✫ **குழுமி** - கூடி
- ✫ **பெற்றோர்** - தாய் தந்தை, மாதா பிதா
- ✫ **வருடம்** - ஆண்டு
- ✫ **பிரதம விருந்தினர்** - பிரதம அதிதி, முதன்மை விருந்தினர்
- ✫ **துணைவியார்** - மனைவியார், பாரியார்
- ✫ **நாவன்மை** - பேச்சுத்திறன்.
- ✫ **புள்ளிகள்** - மதிப்பெண்கள்

## இலக்கங்கள்

இலக்கங்கள் தமிழ் மொழியில் எவ்வாறு எழுதப்படுகின்றன என நாங்கள் அறிந்து கொள்வோம்.

இலக்கங்கள் எழுத்தில் எவ்வாறு எழுதப்படுகின்றன என்பது கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஒன்று | 11 | பதினொன்று | 21 | இருபத்தொன்று |
| 2 | இரண்டு | 12 | பன்னிரண்டு | 22 | இருபத்திரண்டு |
| 3 | மூன்று | 13 | பதின்மூன்று | 23 | இருபத்துமூன்று |
| 4 | நான்கு | 14 | பதினான்கு | 24 | இருபத்துநான்கு |
| 5 | ஐந்து | 15 | பதினைந்து | 25 | இருபத்தைந்து |
| 6 | ஆறு | 16 | பதினாறு | 26 | இருபத்தாறு |
| 7 | ஏழு | 17 | பதினேழு | 27 | இருபத்தேழு |
| 8 | எட்டு | 18 | பதினெட்டு | 28 | இருபத்தெட்டு |
| 9 | ஒன்பது | 19 | பத்தொன்பது | 29 | இருபத்தொன்பது |
| 10 | பத்து | 20 | இருபது | 30 | முப்பது |

| | | | |
|---|---|---|---|
| 40 | நாற்பது | 600 | அறுநூறு |
| 50 | ஐம்பது | 700 | எழுநூறு |
| 60 | அறுபது | 800 | எண்ணூறு |
| 70 | எழுபது | 900 | தொளாயிரம் |
| 80 | எண்பது | 1000 | ஆயிரம் என அமையும். |
| 90 | தொண்ணூறு | | |
| 100 | நூறு | | |
| 200 | இருநூறு | | |
| 300 | முந்நூறு | | |
| 400 | நானூறு | | |
| 500 | ஐந்நூறு | | |

நீங்கள் இப்போது 1 முதல் 1000 வரையான இலக்கங்களை எவ்வாறு எழுத்தில் எழுதுவது என்பதை அறிந்து கொண்டீர்கள்.

## செயற்பாடு

ஆசிரியர் இலக்கங்களைக் கூறுவதை அவதானித்துக் கேளுங்கள்.

நீங்களும் ஒன்று முதல் ஆயிரம் வரை எண்ணுங்கள்.
பாடத்தை உரத்து வாசியுங்கள்.

இலக்கங்களைப் பொருத்தமான முறையில் வாசித்துக் குறிப்பெடுங்கள்.

ஒன்று முதல் ஐம்பது வரை இலக்கங்களை எழுத்தில் எழுதுங்கள்.

பின்வரும் இலக்கங்களை எழுத்தில் எழுதுங்கள்.
12, 90, 900, 910, 990 ............................
16, 88, 103, 520, 780 ............................

## திணையும் பாலும்

### திணை

உலகில் உள்ள உயிர் உள்ளவை, உயிர் இல்லாதவை அனைத்தும் இரண்டு திணைக்குள் அடங்கும். மனிதரையும் தெய்வங்களையும் உள்ளடக்கிய பெயர்ச் சொற்கள் உயர்திணையாகும். மனிதர் அல்லாத பிராணி, மிருகம் போன்ற உயிர்களையும் உயிரற்ற பொருள்களையும் உள்ளடக்கிய பெயர்ச் சொற்கள் அஃறிணையாகும்.

| உயர் திணை | அ.்.றிணை |
|---|---|
| அரசன், எழுத்தாளன் | பூனை, யானை |
| சிறுமி | புத்தகம் |
| புத்த பகவான் | கரும்பலகை |

உயர்திணையில் ஆண்களைக் குறிப்பது ஆண்பால். பெண்களைக் குறிப்பது பெண்பால். பலரைக் குறிப்பது பலர் பால். அ.்.றிணையில் ஆண், பெண் என்ற பாகுபாடு இன்றி ஒன்றைக் குறிப்பது ஒன்றன் பால். பலவற்றைக் குறிப்பது பலவின் பால் என வழங்கப்படும்.

| ஆண் பால் | பெண் பால் | பலர் பால் | ஒன்றன் பால் | பலவின் பால் |
|---|---|---|---|---|
| ரவி | இந்திரா | மக்கள் | பசு | பசுக்கள் |

ஆண் பால், பெண் பால், பலர் பால் ஆகியவை உயர்திணை. ஒன்றன் பால், பலவின் பால் ஆகியவை அ.்.றிணை.

பெயர்ச் சொற்கள் வினை ஏற்கும் போது வினைச் சொற்களும் பெயர்ச் சொற்களுக்கு ஏற்பப் பால் காட்டும்.

உதாரணம் : ரவி வந்தான். பசு வந்தது.
இந்திரா வந்தாள். பசுக்கள் வந்தன.
மக்கள் வந்தார்கள்.

## செயற்பாடு

கீழ்க் காணும் பெயர்ச் சொற்கள் என்ன திணையைச் சார்ந்தவை எனக் கீழேயுள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

வித்தியாலயம், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், பாடசாலை, பசு, குஞ்சு, ஆடு, விருந்தினர்.

உதாரணம் :

| உயர்திணை | அஃறிணை |
| --- | --- |
| அதிபர் | மாடு |
| .................................. | .................................. |
| .................................. | .................................. |
| .................................. | .................................. |
| .................................. | .................................. |

**பின்வரும் பெயர்ச் சொற்களைத் திணை, பால் அடிப்படையில் கீழேயுள்ள அட்டவணையில் எழுதுங்கள்.**

நலன்விரும்பிகள், அனுராதா, அகல்யா, கருணாகரன், துணைவி, தந்தை, பசு, மாணவர்கள், மாணவி

| உயர்திணை | | | அஃறிணை | |
| --- | --- | --- | --- | --- |
| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |